# உமது கரத்திலே வாங்கி

**இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். (1 நாள 29:14)**




மேற்கண்ட வசனம் தாவீது ராஜா கர்த்தருக்காக ஆலயத்தை கட்ட சாலொமோனையும், மற்ற சபையாரையும் ஊக்கப்படுத்தின பொழுது கூறிய வார்த்தைகள் ஆகும். தாவீது இராஜா, **1 நாள 29:1,2** வசனங்களில் **"பின்பு தாவீதுராஜா சபையார் எல்லாரையும் நோக்கி: தேவன் தெரிந்துகொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்யவேண்டிய வேலையோ பெரியது; அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை. நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளிவேலைக்கு வெள்ளியையும், வெண்கலவேலைக்கு வெண்கலத்தையும், இரும்புவேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்."** என்று கூறுகிறார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய சத்தியங்களில் முதலாவது, செய்ய வேண்டிய வேலையோ பெரியது, அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்கு கட்டும் அரண்மனை. ஆம் தனக்காக நகரங்களையும், மாளிகைகளையும் கட்டியமைத்த பொழுது தாவீதுக்கு இருந்த ஜாக்கிரதையை காட்டிலும், எல்லாவற்றிற்கும் உயர்ந்தவராகிய கர்த்தருக்காக, அதிக ஜாக்கிரதையோடு செய்ய வேண்டிய வேலை, பெரியது என்கிறார். தேவனாகிய கர்த்தருக்கு கட்டும் அரண்மனை என்று கூறுவதிலிருந்து, ராஜாவாகிய தனக்காக கட்டிய

அரண்மனைகளிலும் மிகவும் உயர்வுள்ளதாய் கர்த்தருடைய ஆலயமாகிய, தேவாலயம் இருக்கிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே தேவன் தனக்கு கொடுத்த எல்லா செல்வத்தையும் அதற்காக கொடுக்க அவர் முன் வந்தார்.

அடுத்த வசனத்தில் "நான் என்னால் இயன்ற மட்டும்" என்ற வார்த்தையானது, அவர் அதற்காக எவ்வளவு பிரயாசப்பட்டார் என்பதையும், தன் நேரம், பெலன், ராஜ மேன்மை அதிகாரம் எல்லாவற்றையும் அதற்காக செலவழித்தார் என்பதையும், நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் **1 நாள 29:5** ஆம் வசனத்தில் **"இப்போதும் உங்களில் இன்றையதினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்."** இங்கு தனக்கு, தேவன் கொடுத்த அனைத்தையும் தன் குமாரன் மூலமாய் ஆலயத்தை கட்ட அர்ப்பணித்த பின்பு, தான் அர்ப்பணித்தபடியே தன் ஜனங்களும் அர்ப்பணிப்போடு கர்த்தருக்கு கொடுக்க அறைகூவல் விடுக்கிறார். இதனால் **1 நாள 29:6-9** வசனங்களில் **"அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப்பூர்வமாய், தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள். யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்."** இப்படியாக தானும், தன் ஜனங்களும் கர்த்தருக்காக கொடுத்த பின்னர், அவர் கூறும் காரியங்களே முக்கியம். ஏனெனில் அதிகமாய் உற்சாகமாய் கொடுப்பது மாத்திரமல்ல எந்த மனநிலையோடு அதைக் கொடுக்கிறோம் என்பதும் முக்கியம்.

குறிப்பாக **1 நாள 29:11** ஆம் வசனத்தில், **"கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்."** இங்கு "வானத்திலும் பூமியிலும் உள்ளவைகள் எல்லாம் உம்முடையவைகள்" என்ற வார்த்தை முக்கியமானது. ஆம், நாம் கர்த்தருக்காக எதைக் கொடுத்தாலும், அது நாம் அவருக்கு கொடுப்பதற்கு முன்னமே அவருடையதாகவே இருக்கிறது. மேலும் **1 நாள 29:12** வசனத்தில் **"ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்."**, இங்கு குறிப்பாக ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும் என்ற வார்த்தைகள் முக்கியமானதாகும். இவை எல்லாவற்றிற்கும் ஒரு முத்தாய்ப்பாக **"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்." (1 நாள 29:14)** வசனம் காணப்படுகிறது. ஆம் மனப்பூர்வமாய் கொடுப்பதற்கு திராணி உண்டாவதும் கர்த்தராலேயே என்பதை அறிந்த அவர், கடைசியாக உமது கரத்திலே வாங்கி உமக்கு கொடுத்தோம் என்று முடிக்கிறார். இங்கு **1 நாள 29:1-14** வசனங்களில், நாம் காணும் தாவீதின் அறிக்கையும், ஜெபமும், அவரின் உற்சாகமும் மற்றவரை உற்சாகப்படுத்துவதும், மிகவும் அருமையானதாகும். நாம்

கர்த்தருக்காக எப்படிப்பட்ட மனநிலையோடு, எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டான அருமையான சத்திய வசனங்கள் இவை.

ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கூட இதையே, **லூக் 21:4** வசனத்தில் **"அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்."**, என்று இரண்டு காசைப் போட்ட, ஏழை விதவையை குறித்து கூறுகிறார். எனவே உலக பணமதிப்பின்படி, அது கணக்கிட முடியாத பொன் வெள்ளியானாலும், இரண்டு காசானாலும், ஆண்டவர் இரண்டையும் ஒரே தராசில் வைத்தே அளக்கிறார். அதன் அளவு, அதை கொடுப்பவரின் மனநிலையை, வாழ்க்கை நிலையை வைத்தே கணக்கிடப்படுகிறது. தாவீது ஆண்டவருக்காக அதிகமாய் கொடுத்தார். ஆனால் ஆண்டவர் அதிகமாய் கொடுத்ததனால் சந்தோஷப்படவில்லை, அவர் எந்த மனநிலையில், எவ்வாறு கர்த்தராலேயே பொன்னும், பொருளும் உண்டாயினவென்பதையும், அதைத் தான் சம்பாதிக்கிறதற்கான பெலனையும், கர்த்தரே கொடுத்தார் என்பதையும், அதை திரும்ப கர்த்தருக்கு கொடுப்பதற்கான திராணியையும் அவரே கொடுத்தார் என்பதையும், உமது கரத்திலே வாங்கி உமக்கே கொடுத்தோம் என்ற சத்தியத்தை அறிக்கையிட்டதால், அவரின் காணிக்கை ஏற்கபட்டதே தவிர, அவர் கொடுத்த அளவினால் அல்ல. அதுவே அந்த ஏழை விதவையினடத்திலும் காணப்பட்டது. ஆண்டவர் கொடுத்த அந்த இரண்டு காசை, தேவாலயத்தில் வந்த அந்த விதவை அவருக்கு கொடுத்துவிட்டாள். இங்கு தாவீதும், ஏழை விதவையும் கொடுத்த அளவினால் வேறுபட்டாலும், கொடுத்த மனநிலையில் தேவனுக்கு முன்பாக சமமாக காணப்படுகின்றனர்.

ஆனால் இந்த மனநிலை இல்லாமல் சிறிதோ, பெரிதோ எது ஆண்டவருக்கு காணிக்கையாகப் படைக்கப்பட்டாலும், அது காயீன் காணிக்கை போல் நிராகரிக்கப்படும். இன்று கோடி கோடியாக செலவழித்து கட்டிய ஆலய கட்டிடங்களை பார்க்கிலும், ஆண்டவருக்காக அர்ப்பணிப்போடு கட்டியெழுப்பப்பட்ட சிறு ஆலயங்கள் , கல்வி மற்றும் மருத்துவச் சாலைகள், ஆதரவற்றோர் இல்லங்கள் இன்று அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாய் காணப்படுகிறது. சிலர் தம் குடும்ப / சுய / சமுதாய பெருமைக்காக கட்டின ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்களில் அவர்கள் பெயர்கள் காணப்படுகிறதே தவிர ஆண்டவர் அங்கு இல்லை. ஆனால் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்ததை அவர் கரத்தில் கொடுத்த, யாரோ சிலரால் தியாகத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்கள், மிஷன் ஊழியங்கள், ஆலயங்கள் இன்று அநேகருக்கு ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர கூடிய இடமாய், ஆண்டவருக்காக தம்மையும், தமக்குள்ளதையும் அர்ப்பணிக்கும் இடமாய் உள்ளது. மேலும் நாம் ஏற்கனவே **1 நாள 29:2** இல் கண்டது போல நாம் சம்பாதிப்பதற்கான பெலனை, வழி வகைகளை ஆண்டவர் கொடுக்கும் பொழுது, நாம் ஆண்டவருக்கு கொடுத்தால் எல்லாம் எளிதாக வந்துவிடும், நாம் உழைக்க தேவையில்லை என்று எண்ணாமல், ஆண்டவர் கொடுக்கும் பெலத்தோடு பிரயாசப்பட வேண்டும். அப்படி நாம் பிரயாசப்பட்டு ஆண்டவருக்கு கொடுக்கும் பொழுது, அதனால் நம் உள்ளத்திலும் ஒரு பெரிய சமாதானமும் சந்தோஷமும் உண்டாகிறது.

இதில் வெறும் பொன்னும் பொருளும் மாத்திரமல்ல, நம் நேரம், நம்முடைய தாலந்து, தேவன் கொடுத்த கல்வி, ஞானம், அதிகாரம், மேன்மை என எல்லாவற்றையும் மேற்கண்ட மனநிலையோடு நாம் ஆண்டவருக்கென கொடுக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில், மிகப்பெரிய அப்போஸ்தலரான பவுலும், தனக்காகவும் தன்னுடைய வர்களுக்காகவும், ஊழியப் பாதையிலும் வேலை செய்தார். நாம் தான் ஊழியம் செய்கிறோமே இது போதும், நம் தேவைகளை நம்மோடு இருப்பவர்களின் தேவைகளை ஆண்டவர் மற்றொருவர் மூலமாய் சந்திக்கட்டும் என்று இல்லாமல், ஆண்டவர் வேலை

செய்து பிழைப்பதற்கான பெலனையும், வழியையும் உண்டாக்கின பொழுது, முழுநேர ஊழியத்தின் மத்தியிலும், ஊழிய தேவைகளுக்காகவும், தன்னோடு இருந்த சக ஊழியர்களுக்காகவும் அவரே வேலை செய்தார். இது என்று அநேகருக்கு சவாலான ஒரு காரியமாகும். ஏனெனில் இன்று சிலர் எவ்வளவு காணிக்கை வேண்டுமானாலும் தருகிறோம் என்று கூறிவிட்டு காணிக்கையை வெறும் பணமாக பொருளாக மட்டும் பார்த்து, அதை கொடுத்து விட்டு, மற்றபடி தங்கள் வாழ்க்கையை தங்கள் இஷ்டப்படி வாழ்கின்றனர். ஏதோ தாங்கள் காணிக்கை கொடுத்தால், அதனால் ஆண்டவர் தங்களை ஆசீர்வதிப்பார், இன்னும் அதிகம் இவ்வுலக செல்வங்களை தருவார், சுகமாய் வசதி வாய்ப்போடு வாழ செய்வார் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் பாவம் மன்னிக்கப்படும் என்று கூட நினைத்து கொடுக்கின்றனர். அதே நேரத்தில் சிலர் ஆலய ஆராதனைகளில், ஊழியங்களில் உற்சாகத்தோடு குடும்பமாய் பங்குபெறுவர். ஆனால் ஆண்டவருக்காக தியாகத்தோடு எதையும் கொடுக்க மாட்டார்கள். இவர்கள் சோம்பலான, அஜாக்கிரதையான வாழ்க்கை வாழ்ந்தாலும், ஏதோ ஊழியத்தில் பங்கு பெறுவதால், ஆலயத்திற்கு நேரம் தவறாமல் செல்வதால், ஆண்டவர் தங்களை ஆசிர்வதித்து போஷிப்பார் என்ற தவறான எண்ணம் உடையவர்கள். தன்னைப் பின்பற்றி வர விரும்பின ஐஸ்வர்யமுள்ள வாலிபனிடம், ஆண்டவர் எதிர்பார்த்தது இதையே. எனவே ஆண்டவர் ஒவ்வொரு தனி மனிதனிடமும் எதிர்பார்ப்பது எதுவோ, தன் வாழ்க்கையில் அவர் கொடுத்தது எதுவோ, திரும்பக் கேட்பது எதுவோ அதை அப்படியே ஆண்டவருக்கு அர்ப்பணித்து வாழ்வது மேன்மையாகும்.

இது நாம் விளங்கிக் கொள்ள முடியாத அற்புதமான சத்தியமாகும். சகல அதிகாரத்தோடு, மேன்மையோடு, பொன் பொருள், மனைவி, பிள்ளைகள், என்று சகல பூமிக்குரிய நன்மைகளோடும், ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்ட தாவீது இராஜாவையும், இரண்டு காசை போட்ட ஏழை விதவையும், தினந்தோறும் போஷித்து நடத்தினவர் கர்த்தரே. இதை நாம் விளங்கிக் கொண்டோமானால் எவரையும், நாம் அவர் வாழும் வாழ்க்கை தரத்தை வைத்தோ, கொடுக்கும் காணிக்கை அளவை வைத்தோ அளக்க மாட்டோம். அதற்கு பதிலாக தேவனுடைய பார்வையில் அவர்களின் வாழ்க்கை இராஜாவாகிய தாவீதை போலாவது, அல்லது இரண்டு காசை போட்ட ஏழை விதவையை போலாவது காணப்படுகிறதா என்றே பார்ப்போம், ஆமென், அல்லேலூயா.